# Rights of Transgender Persons Bill 2014

திருனர்கள் உரிமைகளுக்கான சட்ட முன்வரைவு சட்டமாக மாறுவதற்கு முன்பு பல படிநிலைகளை அது தாண்ட வேண்டும். ஒரு சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் முன்மொழியப்பட்டு பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே சட்டமாக மாறும். இப்போதைக்கு, இந்த சட்ட முன்வரைவு மாநிலங்களவையில் மட்டுமே முன்மொழியப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இந்தச் சட்ட முன்வரைவு மக்களவைக்கு அனுப்பப்பட்டு ஒப்புதலுக்காக முன்மொழியப்படும். மக்களவையில் தேவையான சட்டத் திருத்தங்கள் செய்த பிறகு மீண்டும் அது மாநிலங்களவைக்கு அனுப்பப்பட்டு அதன் பின்னரே குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.